MERCY AND HOPE

"இரக்கமும் எதிர்நோக்கும்"

# DIOCESAN NEWS LETTER

## VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

**Vol. 21 September - 2025 No. 09**





## Shepherd's Voice

### *"With Mary and the Word, at the Foot of the Cross"*

**Dear Brothers and Sisters in Christ,**

Grace and peace to you all in the name of our Lord Jesus Christ.

As we journey through September, the Church offers us a path of contemplation and commitment - through the motherhood of Mary, the triumph of the Cross, the sorrowful heart of Our Lady, and the treasure of the Word of God. These feasts are not simply liturgical commemorations; they are windows into the heart of our faith and mirrors that challenge our Christian living in society.

Let us walk together through these moments of grace and draw inspiration for our diocesan life.

**1. The Nativity of the Blessed Virgin Mary (8 September) – Girl Children's Day**

We celebrate 8 September as the Feast of the Nativity of the Blessed Virgin Mary - a dawn of joy for the world. In India, this feast has also become a moment to affirm the dignity and worth of girl children in our families, communities, and nation. Mary, born into simplicity and raised in grace, reminds us that every girl child carries within her the seed of hope and holiness.

Yet, we cannot ignore the persistent gender-based discrimination and injustice in our society - female foeticide, educational neglect, trafficking, and unequal access to opportunities. As a Church, we are called not only to honour Mary but to protect, educate, empower, and celebrate every girl child.

I urge our parishes, schools, and families to observe this day meaningfully - with special blessings for girls, awareness programs, and renewed commitment to fostering equal rights and opportunities for all daughters of God.

The right attitude towards girl children will enable us to give equal importance and percentage to our women in all our pastoral structures for our synodal life and treat all our women religious with respect as collaborators in God's mission.

**2. The Exaltation of the Holy Cross (14 September)**

The Feast of the Exaltation of the Holy Cross invites us to gaze upon the cross not as a symbol of suffering alone, but as a sign of victory, healing, and love. In a world that often associates strength with power and success, the cross reveals the paradox of divine strength made perfect in weakness.

As a diocese that bears many wounds, we are reminded that through the cross, Christ transforms suffering into redemption. Let us never tire of proclaiming the cross, carrying it with patience, and embracing it with love.

May our people find in the cross of Christ the courage to persevere, the grace to forgive, and the strength to love radically. Let us promote devotion to the Holy Cross among our Faithful and encourage them to place the Holy Cross in their homes.

**3. Our Lady of Sorrows (15 September)**

The day after the Exaltation, we stand silently with Our Lady of Sorrows, whose heart was pierced by the sword of grief. Mary did not run away from suffering; she remained at the foot of the Cross. She is the mother who walks with every parent who has lost a child, every woman who bears unspoken pain, every family shattered by injustice.

Our Lady of Sorrows teaches us that faith does not remove suffering, but transforms it into compassion. As a diocese, let us accompany the suffering with tenderness. Let us console the afflicted, support the bereaved, and uphold the dignity of the vulnerable.

This feast invites all of us—especially religious women and pastoral workers - to embrace a spirituality of compassion and solidarity, drawing strength from Mary's silent fidelity.

**4. Bible Sunday in the Light of Saint Jerome (30 September)**

As we approach the Feast of Saint Jerome on 30 September, we are reminded of his famous words: "Ignorance of Scripture is ignorance of Christ." This day is celebrated as Bible Sunday, inviting the whole Church to renew our love for the Word of God.

In preparation for Jubilee 2025, Pope Francis has asked the universal Church to return to the essentials of faith - Scripture being central. Let every parish make the Bible more visible, more read, more lived. I encourage Bible enthronement, group readings, youth and children's Bible camps, scriptural catechesis, and family prayer around the Word.

May our Diocese of Vellore be rooted in the Word, so that every action we take springs from divine wisdom and every home becomes a school of the Gospel.

Dear friends, September gives us Mary's presence, the Cross of Christ, and the Word of God - three pillars on which we can build a more compassionate, courageous, and Christ-centred Church.

Let us especially remember and uplift the girl children in our communities, carry the crosses of the poor with dignity, stand with those who grieve, and deepen our love for God's Word.

Yours in the Lord's service,

With mercy and hope,

**+ Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

## BISHOP'S PROGRAMME

| | | |
|---|---|---|
| 1-13 | | Renewal Course for New Bishops, Rome |
| 14 | Sun E | Confirmation Mass, Sipcot |
| 15 | Mon E | Feast Mass & Confirmation, Cheyyar |
| 16 | Tue | Grace & Compassion Jubilee, T.V.Malai |
| 17 | Wed | SHS, Pastoral Course, Poonamallee |
| 18 | Thu | MC Sisters, Mother's Feast, Shembakkam |
| 20 | Sat | Confirmation Mass, Gudiyatham |
| 22-24 | | Bangalore |
| 25 | Thu | Good Shepherd, Pastoral Course, Coimbatore |
| 28 | Sun M | Feast & Confirmation Mass, Pallikonda |
| 29 | Mon E | Altar Servers Rally, Polur |

| | | | |
|---|---|---|---|
| 30 | Tue | M | Blessings of the Church & Confirmation Mass, Allikondapattu |
| | | E | Meeting with Co-Directors of Foyer De Charite, France, Sneha Deepam |

With mercy and hope,

**+ Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

## MONTHLY RECOLLECTION

Dear Fathers, Greetings to all of you in Jesus.

This September month the recollection would be in the Vicariate level.

Yours in Christ,

**Msgr. M. John Nicholas**
Vicar General

## HOLY FATHER'S INTENTION

For our relationship with all of creation"Let us pray that, inspired by Saint Francis, we might experience our interdependence with all creatures who are loved by God and worthy of love and respect.

## PROCURATOR'S OFFICE

### Good Friday Collection - 2025

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Perundhuraipattu | 3960 |

**Note:** Thanks for all those who have alredy remitted the Good Friday Collection, First Sunday Collection and Excessive Masses.

### Important Reminder

Dear Parish Priests,

This is a gentle reminder to:

1. Submit the First Sunday collection to the Procurator's office
2. Forward excessive Mass intentions to the Procurator's office.
3. Remit the Good Friday collection, if not already done.

Your prompt cooperation is appreciated.
Best regards,
**Fr. S. Richard Peraira**
Procurator

**இயேசுவின் திருஇருதய சபையை நிறுவிய அன்னை ஸ்கொலாஸ்டிகா அவர்களை புனிதப்படுத்தும் செயல்முறைக்கான மனுதாரரின் விண்ணப்பம் ஆயர் அவர்களால் வெளியிடப்படுவதற்கான அறிவிப்பு**



VERY REV.MOTHER SCHOLATICA SSHJ
FOUNDER OF SSHJ

அன்புநிறை அருள்பணியாளர்களே, அருள்சகோதரிகளே மற்றும் இறைமக்களே, இயேசுவின் இனிய நாமத்தில் எனது அன்பான வாழ்த்துக்களும் செபங்களும் ஆசீரும்.

இயேசுவின் திருஇருதய சபையை நிறுவிய அன்னை ஸ்கொலாஸ்டிக்கா (மரிய ஸ்கொலாஸ்டிக்கா சவரிமுத்து) குழித்துறை மறைமாவட்டம் (அன்றைய கோட்டாறு மறைமாவட்டம்), பட்டரிவிளை ஊரில் 1917 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் நாள் பிறந்தார். தனது 22 ஆம் வயதில் இயேசுவின் அழைப்பை ஏற்று புனித அகுஸ்தினார் சபையின் தவதுறவியாக இணைந்தார். சுமார் 13 ஆண்டுகளுக்குப் பின், 1952 ஆம் ஆண்டு தனது 35 ஆம் வயதில் தூத்துக்குடி மறைமாவட்டம் அழகப்பபுரத்தில் இயேசுவின் திருஇருதய சபையைத் தொடங்கினார். ஒரு புனிதையாக இறைவனுக்கும் மக்களுக்கும் அதிகமான தொண்டு செய்து அசாதாரண வாழ்வு வாழ்ந்தார். 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் நாள், ரங்காபுரம், சத்துவாச்சாரி பங்கு, வேலூர் மறைமாவட்டத்தில் தமது 76வது வயதில் இறைவனுடன் இணைந்தார். இவரது சிறந்த முன்மாதிரியான வாழ்வால் ஈர்க்கப்பட்டு இன்றும் பல இளம் பெண்கள் இயேசுவின் திருஇருதய சபை துறவியாக உலகின் பல பகுதிகளில் மிகச்சிறந்த பணியாற்றுகிறார்கள்.

20-ம் நூற்றாண்டில் இயேசுவின் திருஇருதய சபையை நிறுவிய அன்னை ஸ்கொலாஸ்டிக்காவின் வாழ்வு ஒரு புனித வாழ்வு ஆகும்.

இயேசுவை அதிகமாக அன்பு செய்து அவரது இறையாட்சி மலர, நலிந்த மக்கள் முழுமையான வாழ்வு பெற அயராது உழைத்தவர் அன்னை ஸ்கொலாஸ்டிக்கா. பல இளம் உள்ளங்களையும் இயேசுவின் பால் ஈர்த்து அரும் பணியாற்றினார். இயேசுவின் நல்ல பண்புகள், நற்செய்தி விழுமியங்கள், திருஅவையின் அறிவுரைகள் யாவற்றையும் முழுமையாகவும் அசாதாரண அர்ப்பணத்துடனும் வாழ்ந்து காட்டினார். வாழும் போதே புனிதையாக பலராலும் போற்றப்பட்ட இவரது மேலான சான்று வாழ்வு புனித வாழ்விற்கு அன்றாடம் நம்மை வழி நடத்தும் பேரருவியாகும். நீ புனிதையாக வாழ்வதை நான் விரும்புகிறேன் என்ற உறுதியான இலட்சியத்துடன் எடுத்துக்காட்டான தூய வாழ்வு வாழ்ந்த இவர் இன்றும் பலரது உள்ளங்களைத் தொட்டு தூய வாழ்வுக்கு தொடர்ந்து வழிநடத்த முடியும் என்பது உறுதி.

அனுதினமும் பல மணிநேரம் ஆண்டவர் முன் செபத்தில் செலவு செய்தவர் அன்னை ஸ்கொலாஸ்டிக்கா, அதுபோல இரவு பகல் பாராது கைவிடப்பட்டோருக்காக தன்னைக் கையளித்தவர். அவரது வாழ்வின் சிறப்பான பண்புகளையும், புனிதத்தின் கூறுகளையும், ஆண்டவரிடமிருந்து பெற்று தரும் அருள் வரங்களையும் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளுதல் இவர் திருஅவையின் மிக உயர்ந்த அங்கீகாரம் பெற பேருதவி புரிவதாகும்.

வாழும் போதே புனிதையாக இறைவனுக்கும் மக்களுக்கும் முழுமையான பணி செய்து வாழ்ந்த நம் அன்னை சிறந்த மாதிரியாகி, இறைவனின் அருள் வரங்களை இன்னும் ஏராளமாக நமக்குப் பெற்றுத்தர முடியும் என்ற சிந்தனையுடன் திருஅவையின் உயர் அங்கீகாரம் பெற்று வணக்கத்துக்குரியவர், அருளாளர், புனிதர் என்ற நிலைக்கு இவரைப் பரிந்துரை செய்ய விரும்புகிறேன். இன்றைய திருஅவைக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் இவரது வாழ்வு பேருதவியாக மாறிட முடியும் என்பது உறுதி.

எனவே, திருஅவையின் நலனுக்காகவும், நம்பிக்கையாளர்களின் புனித வாழ்வுக்கு முன் மாதிரியாகவும் அன்னை ஸ்கொலாஸ்டிக்கா வணக்கத்துக்குரியவராக, அருளாளராக, புனிதராக, புனிதர்நிலை அறிவிப்புப் பேராயத்திடம் பரிந்துரை செய்கிறேன். அன்னை ஸ்கொலாஸ்டிக்கா பற்றிய பயனுள்ள செய்திகள் யாருக்காவது தெரிந்தால் அதை எனது உரிமைப் பதிலாளியிடம் தெரிவிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இறையாசீர் உங்களை நிறைவாக நிரப்புவதாக
கிறிஸ்துவில் உங்களோடு

**மேதகு முனைவர். அம்புரோஸ் பிச்சைமுத்து**
ஆயர், வேலூர் மறைமாவட்டம்

தொடர்புக்கு :

Rev. Fr. Dr. A.J.Jagadish
Episcopal Delegate
Catholic Bishop's House
34, Officers' Line, Post Box No. 107,
Vellore - 632 001. Tamilnadu, India.
Cell No : +91 8220994878
Mail ID : jagadishaj30@gmail.com

## கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையம்

**பாசமிகு பள்ளி தாளார் மற்றும் தலைமையாசிரியர் அவர்களுக்கு மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையத்திலிருந்து நல்வாழ்த்துக்கள்.**

நமது கிறிஸ்துவ பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்திற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளை நல்லொழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் உருவாக்க வேண்டியது ஆசிரியர்களாகிய நமது கடமையும், பொறுப்பும் ஆகும்.

எனவே மறைக்கல்வி / நன்னெறி ஆசிரிய பெருமக்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு செப்டம்பர் 13.09.2025 (சனி) மற்றும் 14.09.2025 (ஞாயிறு) தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கு வேலூர் மற்றும் திருவண்ணாமலை மறைவட்டத்தில் நடைபெற உள்ளது. நம் பள்ளியில் மறைக்கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியர் மற்றும் நன்னெறி பாடம் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் ஆக இரு ஆசிரியர்களை தவறாமல் அனுப்பி வைக்குமாறு பள்ளி தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் .

| | | |
|---|---|---|
| தலைமை | : | மேதகு முனைவர். அம்புரோஸ் பிச்சைமுத்து<br>ஆயர், வேலூர் மறைமாவட்டம் |
| கருத்தாளர் | : | அருட்பணி. பெனடிக்ட் ஆனலின்<br>செயலர், தமிழக மறைக்கல்விப் பணிக்குழு<br>முப்பணி மையம், திண்டிவனம் |
| நாள் | : | 13.09.2025 சனிக்கிழமை-திருவண்ணாமலை<br>உலக மாதா ஆலயம்<br>(காலை 9 மணிமுதல் மாலை 4.30 வரை)<br><br>14.09.25 ஞாயிற்றுக்கிழமை வேலூர்<br>ஆயர் இல்லம்<br>(காலை 9 மணிமுதல் மாலை 4.30 வரை) |
| கலந்துகொள்ளும் இடம் மற்றும் மறைவட்டங்கள் | : | திருவண்ணாலை உலக மாதா ஆலயம்<br>(திருவண்ணாமலை, வேட்டவலம், சேத்பட், போளூர்)<br><br>வேலூர் - ஆயர் இல்லம், ஜூபிலி ஹால்<br>வேலூர், வந்தவாசி, திருப்பத்தூர், அரக்கோணம் |

குறிப்பு : ஏதாவது ஒரு மறைவட்டத்தில் தவறாமல் பங்கேற்க ஆசிரிய பெருமக்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மறைக்கல்வி - நன்னெறி பாடங்கள் ஆய்வுக்கான கால அட்டவணை வேலூர் மற்றும் அரக்கோணம் மறைவட்டங்கள் 2025 - 2026**

அன்புள்ள தாளாளர், தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர் பெருமக்களுக்கு, மேய்ப்புப்பணி நிலையத்திலிருந்து நல்வாழ்த்துக்கள். மறைக்கல்வி, நன்னெறி பணியில் நீங்கள் செய்து வரும் எல்லா தியாகங்களுக்காகவும் உங்களை பாராட்டுகிறேன். இவ்வாண்டு உங்கள் பள்ளியில் மறைக்கல்வி, நன்னெறி பாடங்களை ஆய்வு செய்ய கீழ்க்கண்ட தேதியில் அருட்பணி. N.T.இருதயராஜ் தலைமையில் மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழு வருகின்றது என்பதை இந்த சுற்றறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களின் மேலான வரவேற்ப்பை மறைக்கல்வி பிள்ளைகளுக்கு உதவும் வகையில் காணிக்கையாக தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | | பார்வையிடும் பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 20.8.25 புதன் | காலை | 1. தொன்போஸ்கோ மேல்நிலைப்பள்ளி, சகாயத்தோட்டம் |
| | | 2. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, உரியூர்குப்பம் |
| | பிற்பகல் | 1. தூய நெஞ்ச மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அரக்கோணம் |
| | | 2. ஆர்.சி.எம். உயர்நிலைப்பள்ளி, பழனிப்பேட்டை |
| | | 3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, பழனிப்பேட்டை |
| | | 4. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, ஆலப்பாக்கம் |
| 21.8.25 வியாழன் | காலை | 1. புனித சிறுமலர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராணிப்பேட்டை |
| | | 2. புனித சிறுமலர் தொடக்கப்பள்ளி, இராணிப்பேட்டை |
| | | 3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, இராணிப்பேட்டை |
| | | 4. புனித சிறுமலர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அம்மூர் |
| | | 5. புனித தோமா ஆங்கிலப்பள்ளி, சிப்காட் |
| | பிற்பகல் | 1. Anne Marie Matric Hr.Sec.School, Thiruparkadal |

| | | |
|---|---|---|
| 22.8.25<br>வெள்ளி | காலை | 1. புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வேப்பூர்<br>2. சிநேகதீபம் மெட்ரிக் பள்ளி, அலுமேலுரங்காபுரம் |
| | பிற்பகல் | 1. திருச்சிலுவை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி |
| 25.8.25<br>திங்கள் | காலை | 1. சாவியோ மெட்ரிக்பள்ளி, வேலூர்<br>2. தொன்போஸ்கோ தொடக்கப்பள்ளி, வேலூர்<br>3. தொன்போஸ்கோ உயர்நிலைப்பள்ளி, வேலூர் |
| | பிற்பகல் | 1. செயின்ட் மேரிஸ் தொடக்கப்பள்ளி, வேலூர்<br>2. செயின்ட்மேரிஸ் ஆங்கில தொடக்கப்பள்ளி, வேலூர் |
| 26.8.25<br>செவ்வாய் | காலை | 1. தொன்போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைபள்ளி, காந்திநகர்<br>2. குளூனி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, காட்பாடி |
| | பிற்பகல் | 1. புனித சேவியர் உயர்நிலைப்பள்ளி, கிறிஸ்டியான்பேட்டை<br>2. புனித சேவியர் தொடக்கப்பள்ளி, கிறிஸ்டியான்பேட்டை |
| 28.8.25<br>வியாழன் | காலை | 1. செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>2. உத்திரியமாதா நடுநிலைப்பள்ளி, ஓல்டுடவுன்<br>3. உத்திரியமாதா ஆங்கிலப்பள்ளி, ஓல்டுடவுன் |
| | பிற்பகல் | 1. புனித ஜோசப் உயர்நிலைப்ள்ள்ளி, அ.கட்டுபடி<br>2. புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, அ.கட்டுபடி<br>3. ஆர்.சி.எம்.நடுநிலைப்பள்ளி, கணியம்பாடி |

| | | |
|---|---|---|
| 29.8.25 வெள்ளி | காலை | 1. தொன்போஸ்கோ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி காந்திநகர் |
| | | 2. செயின்ட் தெரசா உயர்நிலைப்பள்ளி, பள்ளிக்கொண்டா |
| | | 3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, பள்ளிகொண்டா |
| | | 4. LFC தொடக்கப்பள்ளி, பள்ளிக்கொண்டா |
| | பிற்பகல் | 1. St. John's Matric School, Gudiyatham |

## செப்டம்பர் மாத திருமண தயாரிப்பு வகுப்புகள்

**06.9.2025 - 07.9.2025 - மாதத்தின் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை**

இடம் - உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை

**13.9.2025-14.9.2025 மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை**

இடம் - தூய இருதய ஆண்டவர் ஆலயம், வந்தவாசி
சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல் 4.00 மணிவரை

**20.9.2025-21.9.2025 மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை**

இடம் - ஆயர் இல்லம், வேலூர்
சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல் 4.00 மணிவரை

இறைப்பணியில் அன்புடன்
அருட்பணி **N.T.இருதயராஜ்**
இயக்குநர், மேய்ப்புப்பணி மையம். வேலூர்

**வேலூர் சமூக சேவை சங்கம் - வேலூர் மறைமாவட்டம்**

03.08.2025 அன்று பாராசூர் பங்கில் வேலூர் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்பணி அமலநாதன் அவர்களின் வழிகாட்டுதலின்படி பாராசூர் பங்குதந்தை அருட்பணி இன்பராஜ் அவர்களின் முன்னிலையில் சுற்றுப்புற விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பங்குமக்கள் மற்றும் கிளைபங்கு மக்களும் கலந்துகொண்டனர். சுற்றுப்புறத்தூய்மை, இயற்கை வளத்தை பாதுகாத்தல் மற்றும் மரம் நடுதல் பற்றி மக்களுக்கு விளக்கப்பட்டது. கணக்காளர் திரு. இராசு லூயிஸ் அவர்கள் சுற்றுப்புறத் தூய்மை குறித்து மக்களுக்கு விளக்கி கூறினார். விவசாய சங்கம் பற்றி திரு. சவரிநாதன் எடுத்துக்கூறினார். கிராமத்தை சுற்றி, சுற்றுப்புறத் தூய்மை பற்றி விழிப்புணர்வு முழக்கத்துடன் ஆலயத்தை நோக்கி பேரணியாக சென்றனர். ஆலய வளாகத்தில் மரக்கன்றை நட்டனர். பின்பு இயக்குநர் தந்தையும் பங்குதந்தையும் சேவியர் நகரில் உள்ள மறைமாவட்டத்திற்கு சொந்தமான நிலத்தை மேற்பார்வையிட்டார்கள்.

05.08.2025 பங்குதந்தை அருட்பணி மலையப்பன் முன்னிலையில் வேலூர் சமூக சேவை சங்க இயக்குனர் அருட்பணி அமலநாதன், திரு. இராசு லூயிஸ், திரு. சவரிநாதன் ஆகியோர் அ.கட்டுப்படியில் விவசாய சங்கத்தை பார்வையிட்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டு சங்க வளர்ச்சியையும், செயல்பாடுகளையும் பாராட்டினார்கள். 50 விவசாய உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

24.08.2025 அன்று பல்லாலகுப்பத்தில் இயக்குனர் தந்தையின் வழிகாட்டுதலின்படி பங்குதந்தை அருட்பணி அந்தோணி செல்வராஜ் முன்னிலையில் கோல்பிங் குழுக்கள் மேற்பார்வையிடப்பட்டன. மகளிர் குழு அதன் செயல்பாடுகள் பற்றி திருமதி. செலின் அவர்கள் விளக்கி கூறினர். திரு. இராசு லூயிஸ் அவர்கள் சங்க பதிவேடுகள் பராமரிப்பு பற்றியும், திரு. சவரிநாதன் விவசாய சங்கம் பற்றியும், கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. யேசுகுமார் சிறுதொழில் தொடங்குவது பற்றியும், குழுக்களில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கும் வழிமுறைகளைப் பற்றியும் விளக்கி கூறினார்.

பேர்ணாம்பட்டு, செண்டத்தூர் ஆகிய கிளைப்பங்குகளில் புதியதாக கோல்பிங் குழுக்கள் தொடங்குவது பற்றி ஒருங்கிணைப்பாளர் திரு. யேசுகுமார் விளக்கி கூறினார். பின்பு இயக்குனர் தந்தையும் பங்கு தந்தையும் Sisters of Destitute அருட்சகோதரிகள் பயன்படுத்திய VSSS-க்கு சொந்தமான மருந்தக கட்டிடத்தை மேற்பார்வையிட்டனர்.

25.08.2025 அன்று இராணிப்பேட்டை பங்கில் நடைபெற்ற அரக்கோணம் மறைவட்ட அருட்தந்தையர்களின் கூட்டத்தில் வேலூர் சமூக சேவை சங்க இயக்குனர் அருட்பணி அமலநாதன் அவர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துக்கொண்டனர். இயக்குனர் தந்தை அவர்கள் பங்கில் உள்ள கோல்பிங் குழு, மகளிர் குழு மற்றும் விவசாய குழுக்களின் தற்போதைய நிலை குறித்தும், எதிர்கால செயல்பாடுகள் குறித்தும் ஆலோசனை நடத்தினார். பங்கு தந்தையர்களின் ஒத்துழைப்பும் அதன் அவசியத்தையும் எடுத்துக்கூறினர்.

**HUNGER & DISEASE FUND COLLECTION – 2025**

| S.No. | DATE | PARISHES | AMOUNT [RS.] |
|---|---|---|---|
| 1 | 28.07.2025 | Ambur | 3,060 |
| 2 | 01.08.2025 | Madurampet | 2,000 |
| 3 | 25.08.2025 | Uriurkuppam | 3,000 |

குறிப்பு :

பசிப்பிணி போக்கும் திட்டத்திற்கு பங்கு தந்தையர்களும், இறைமக்களும் தாராளமாக நிதி வழங்கியமைக்கு நன்றியும் செபமும்.

செய்தி தொகுப்பு:
திரு. **K.ஏசுகுமார்,**
கோல்பிங் ஒருங்கிணைப்பாளர்

பேரருட்திரு. **M.அமலநாதன்,**
இயக்குநர், **VSSS**
ஆயர் இல்லம், வேலூர்

## THIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

09.8.2025 திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் மாதர் சங்கம், கோல்பிங் சங்கம் மற்றும் மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் ஆகியோர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் விருதுவிளங்கினான் பங்கில் காலை 11.00 மணியளவில் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும் TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்ப சேகர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் குழுக்களின் வாழ்வாதார செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பகிரப்பட்டது. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் 30 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

10.8.2025 விருதுவிளங்கினான் பங்கில் செயல்படும் கோல்பிங் சங்க உறுப்பினர்கள், மக்கள் மற்றும் மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கு காலை 11.00 மணியளவில் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் அவர்கள் முன்னிலையிலும், பங்குத்தந்தை அருட்பணி. இருதயசாமி அவர்களின் தலைமையிலும் நடைபெற்றுது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்ப சேகர் மற்றும் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் ஆகியோர் வழங்கினர். கருத்தரங்கின் இறுதியில் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களின் பேரணியோடு 10 மரக்கன்றுகள் பள்ளி வளாகத்தில் நடப்பட்டது. இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 45 நபர்கள், மாணவர்கள் 75 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

18.8.2025 திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் மாதர் சங்கம், கோல்பிங் சங்கம் மற்றும் மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் ஆகியோர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் பவித்திரம் பங்கில் மாலை 3.00 மணியளவில் இயக்குநர் தந்தை அருட்பணி. S.பிரான்சிஸ்,

பங்குத்தந்தை அருட்பணி. இருதயராஜ் மற்றும் TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்ப சேகர் இவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் குழுக்களின் வாழ்வாதார செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பகிரப்பட்டது. இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 120 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

20.8.2025 சோமாசிபாடி பங்கில் செயல்படும் கோல்பிங் சங்க உறுப்பினர்களுக்கு ஒத்த கருத்துடைய பிற அமைப்புகளோடு எவ்வாறு இணைந்து வாழ்வாதாரத்தை உருவாக்குவது என்பது குறித்த பயிற்சி காலை 11.00 மணியளவில் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றுது. கருத்துரைகளை குறித்து TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்ப சேகர் மற்றும் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் ஆகியோர் வழங்கினர். கருத்தரங்கின் இறுதியில் சங்கம் புதுப்பிக்கப்பட்டு, புதிய கோல்பிங் குழு உருவாக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 53 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

22.8.2025 கீழ்நாத்தூர் பங்கில் செயல்படும் கோல்பிங் சங்க உறுப்பினர்களுக்கு வாழ்வாதார தொழில் பயிற்சி மதியம் 2.00 மணியளவில் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும் பங்குத்தந்தை அருட்பணி. மரியஅந்தோணி இவர்கள் தலைமையில் நடைபற்றது. பயிற்சிகளை TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்ப சேகர் மற்றும் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் ஆகியோர் வழங்கினர். இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 32 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அருட்பணி. **பிரான்சிஸ்**
இயக்குநர், TVMSSS
திருவண்ணாமலை

# மரியாயின் சேனை

27.7.25 ஞாயிறு அன்று சேத்துப்பட்டு மறைவட்டம் மோட்சவாடி பங்கில் அருட்தந்தை ஜீவகன் தலைமையில் அப்பங்கின் கிளைப் பங்குகள் நான்கும் சேர்ந்து மொத்தம் 67 உறுப்பினர்கள் கொண்ட 4 பிரசீடியங்கள் துவக்கப்பட்டன. கொமித்சிய அலுவலர்கள் ரத்னாமேரி, ஜெசிந்தா அவர்களும் புதிய பிரிசீடியம் தந்தை அவர்கள் தலைமையில் நடத்தி புதிய சேனையார்களின் வாக்குறுதி அளித்து தந்தை அவர்களின் தலைமையில் துவக்கி வைத்தனர்.

10.8.25 ஞாயிற்றுக்கிழமை சேனையின்மேல் நிர்வாக சபையான கொமித்சியக் கூட்டம் நடைபெற்றது. இதில் 5 நிர்வாக சபை தலைவர்களும், 5 பிரசீடிய தலைவர்களும் மொத்தம் 27 பேர் பங்கேற்றனர் கொமித்சிய கூட்டத்திற்குபின் புதிதாக சேர்ந்த சேனையாளர்களுக்கு பயிற்சி வகுப்பு எடுக்கப்பட்டு கூட்டம் 5 மணிக்கு நிறைவுற்றது.

17.8.25 ஞாயிறு காலை 10 மணியளவில் அரக்கோணம் பங்குதந்தை பேரருட்பணி ஆனந்தராஜ் தலைமயில் ஆர்சேஸ் விழா நடைபெற்றது. சோகனூர் பங்குதந்தை, கொமித்சிய அலுவலர்கள் வாழ்துறை வழங்கினர். நிர்வாக சபையின் ஆண்டறிக்கை வாசிக்பபட்டு இறுதி ஜெபம் குருக்களின் ஆசீருடன் விழா முடிவுற்றது. இதில் கிளைப்பங்குகள் 5 பிரசீடியங்களில் இருந்து மொத்தம் 67 பேர் பங்கேற்றனர். அனைவருக்கும் பகல் உணவு வழங்கப்பட்டது.

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

சகோ. **ரத்னாமேரி**
கொமித்சிய தலைவி, வேலூர்





## BIRTHDAY

**Dear Fathers, we wish you God's blessings and good health**

| | | |
|---|---|---|
| 1 | Fr. A.Jonas Philomina Doss | 01-09-1979 |
| 2 | Fr. S.Jose Enchackal | 03-09-1951 |
| 3 | Fr. N.Arockia Doss | 06-09-1970 |
| 4 | Fr. K.A.Rayappa | 08-09-1954 |
| 5 | Fr. A.Bernard Velanganni | 08-09-1972 |
| 6 | Fr. R.James Vincent | 10-09-1957 |
| 7 | Fr. A.Yesu Durai | 15-09-1984 |
| 8 | Fr. M.Martin | 19-09-1958 |
| 9 | Fr. S.Sagayanathan | 19-09-1973 |
| 10 | Fr. M.Thangaraj | 19-09-1974 |
| 11 | Fr. G.Mathias | 20-09-1940 |
| 12 | Fr. M. A.Arockia Raj | 20-09-1973 |
| 13 | Fr. A.Lazar Velankanni | 23-09-1981 |
| 14 | Fr. Y.Anthony Raj | 25-09-1953 |
| 15 | Fr. A.Roy Lazar | 28-09-1959 |
| 16 | Fr. V.Kuriakose Kariakatt | 30-09-1951 |

## ORDINATION ANNIVERSARIES

**Congratulations and Prayerful wishes**

| | | |
|---|---|---|
| 1 | Fr. A. Jonas Philomina Doss | 24-08-2005 |

## NECROLOGY

**Let us remember our deseased Priests**

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Immanuel Alves SDB | 07.09.1976 |
| 2 | Rev. Fr. Sebastian | 10.09.2020 |
| 3 | Rev. Fr. Fioro de Beneditto SDB | 11.09.1978 |
| 4 | Rev. Fr. M. Rayappa | 11.09.2020 |
| 5 | Rev. Fr. Michael Cusini SDB | 17.09.1976 |
| 6 | Rev. Fr. Lazar SDB | 18.09.1997 |
| 7 | Rev. Fr. C. Kurivilla | 19.09.2001 |
| 8 | Rev.Fr. A.Joseph | 21.09.2014 |
| 9 | Rev. Fr. Peter Meligo | 23.09.1958 |

**Eternal rest grant unto your servents, O Lord!**

## LITURGICAL CALENDER SEPTEMBER - 2025

| | | |
|---|---|---|
| 01 | Sun | 22nd Ordinary Sunday |
| 03 | Tue | St. Gregory the Great, PP., Dr., Mem |
| 08 | Sun | Our Lady of Velanganni – Arokia Annai, Sol<br>23rd Ordinary Sunday |
| 09 | Mon | St. Peter Claver Pr. Mem |
| 12 | Thu | The Most Holy Name of Mary |
| 13 | Fri | St. John Chrysostem, Bp. Dr. Mem |
| 14 | Sat | The Exaltation of The Holy Cross, Feast |
| 15 | Sun | 24th Ordinary Sunday |
| 16 | Mon | Ss. Cornelius Pp., & Cyprian Bp. Mrs. Mem |
| 17 | Tue | St. Robert Bellarmine Bp., Dr., Mem |
| 21 | Sat | St. Mathew Ap, Ev, Feast |
| 22 | Sun | 25th Ordinary Sunday |
| 23 | Mon | St. Pio Pietrelcina Pr. Mem |
| 27 | Fri | St. Vincent de Paul, Pr, Rf, Mem |
| 29 | Sun | 26th Ordinary Sunday |
| 30 | Mon | St. Jerome Pr., & Dr., Mem |

# *The exaltation of the Holy cross*

